

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 271 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 29 – வெள்ளிக்கிழமை 12 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 271 : Thiruvalluvar Year - 2054 - Chithirai 29 - Friday 12 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## வாகனங்கள் தயாரிப்பில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது!

# தொழில் வளர்ச்சிக்கான ஊக்கம் என்றும் தொடரும்!

## ஹூண்டாய் நிறுவன விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மே 12-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (11.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில் வாகனங்கள் தயாரிப்பில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது எனவும் தொழில்துறை வளர்ச்சிக்கான ஊக்கத்தை அரசு என்றும் தொடர்ந்து வழங்கும் எனவும் குறிப்பிட்டார்.**

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஹூண்டாய் நிறுவனத்தினுடைய முதல் அலகிற்கு அடிக்கல் நாட்டினார்கள். 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டாவது தொழிற்சாலையையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவங்கப்பட்டது.

### நிறுவனத்தின் ஒருகோடியாவது காரை அறிமுகம் செய்தேன்!

இதே ஹூண்டாய் நிறுவனத்தினுடைய ஒரு கோடியாவது காரை 2021 ஆம் ஆண்டு ஜீன் மாதம் தொழிற்சாலையில் இருந்து நான் அறிமுகம் செய்து வைத்ததை இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (11.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் உருவாக்குதல், மின் வாகன மின்கலன் கூட்டப்பட்ட தொகுப்பு, மின் வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்து தருவது குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் உன்சூ கிம், நிர்வாக இயக்குனர் (கார்ப்பரேட் விவகாரங்கள்) டி.எஸ்.கிம், துணைத் தலைவர் (நிதி) டி.சரவணன், அசோசியேட் துணைத் தலைவர் புனீத் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டிற்கும், ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்திற்கும் இடையே உள்ள நம்பிக்கை மற்றும் கூட்டு முயற்சியின் காரணமாக இந்த நிறுவனத்தினுடைய மொத்த முதலீடு சுமார் 23 ஆயிரத்து 900 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாக அமைந்திருக்கிறது. தற்போது ஹூண்டாய் நிறுவனம், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய கார் உற்பத்தி நிறுவனமாகவும், கார் ஏற்றுமதியில், இரண்டாவது இடத்தில் இருப்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

ஆட்டோமொபைல் மற்றும் அதன் பாகங்கள் தயாரிப்பில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. அதன் அடுத்த பரிணாம வளர்ச்சியாக, மின்னூர்திகள் (Electrical vehicles) தயாரிப்பில் தற்போது தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவாகியுள்ளது உள்ளபடியே பாராட்டுக்குரியது. இதற்கு, தமிழ்நாட்டில் உள்ள திறன் வாய்ந்த மனித வளம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் முக்கிய காரணங்களாக உள்ளன. அந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத்தான், 2023ஆம் ஆண்டு பிப்ரவரியில் "தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023" என்னால் வெளியிடப்பட்டது.

### தொடர்ந்து தமிழ்நாட்டைத் தேர்வு செய்துள்ளது நமக்கு பெருமை!

இதன் காரணமாக, ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், இந்தியாவிற்கும், பிற உலக நாடுகளுக்கும், மின்னூர்தி தயாரித்தலுக்கான தனது நெடுங்கால முதலீட்டுத் திட்டத்திற்கு, முதன்மை தளமாக தமிழ்நாட்டைத் தேர்வு செய்துள்ளது உள்ளபடியே நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாக அமைந்திருக்கிறது. அதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பாக எனது நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஹூண்டாய் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டையில் தற்போதுள்ள தொழிற்சாலையினை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைக்கான மின்னூர்தி மையமாக மேம்படுத்தும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார் டி.ஆர்.பி.ராஜா!

## ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்! சில அமைச்சர்களின் துறைகள் மாற்றம்!

**சென்னை, மே 12-**

**புதிய அமைச்சர் பதவியேற்பு நிகழ்ச்சி கிண்டி ஆளுநர் மாளிகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது. அமைச்சராக டி.ஆர்.பி.ராஜாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி பிரமாணம் செய்து வைத்தார்.**

### டி.ஆர்.பி.ராஜாவுக்கு பதவி பிரமாணம்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரையை ஏற்று டி.ஆர்.பி.ராஜாவை அமைச்சராக நியமிக்க ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்தார். இதையடுத்து புதிய அமைச்சர் பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகை தர்பார் ஹாலில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புதிய அமைச்சர் பதவியேற்பு விழா நடைபெற்றது. ஆளுநர் ஆர்.என்.ரவி, டி.ஆர்.பி. ராஜாவிற்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் நேற்று (11.5.2023) ஆளுநர் மாளிகையில், முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராக பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

புதிய அமைச்சராகப் பதவியேற்ற டி.ஆர்.பி.ராஜாவிற்கு ஆளுநர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் டி.ஆர்.பி.ராஜாவிற்கு வாழ்த்து கூறினார். இதைத்தொடர்ந்து ஆளுநருடன் அமைச்சர்கள் அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

### சில அமைச்சர்களின் துறைகள் மாற்றியமைப்பு!

தமிழ்நாடு அமைச்சரவையில் அமைச்சர்களின் துறைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜாவுக்கு தொழில்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரையை ஏற்று அமைச்சர்களின் துறை மாற்றத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, **தங்கம் தென்னரசுவுக்கு நிதி, மனிதவள மேம்பாடு துறை ஒதுக்கப்பட்டுள்ளது.**

**செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கு கூடுதலாக தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை துறை ஒதுக்கப்பட்டுள்ளது.**

**அமைச்சர் மனோதங்கராஜுக்கு பால்வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.**

**புதிதாகப் பதவியேற்ற டி.ஆர்.பி.ராஜாவுக்கு தொழில்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.**

### டெல்லி அரசு - துணை நிலை ஆளுநர் அதிகார வரம்பு வழக்கு

## மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே நிர்வாக அதிகாரம்!

### உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு!

*புதுடெல்லி, மே 12-*

*டெல்லி அரசுக்கும் துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங்கிற்கும் இடையேயான அதிகார வரம்பு வழக்கில், ஜனநாயகப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே நிர்வாக அதிகாரம் உண்டு என உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது.*

*ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம் மற்றும் பணியிட மாற்றம் தொடர்பாக டெல்லி அரசுக்கும் துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங்கிற்கும் இடையேயான அதிகார வரம்பு வழக்கில், தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பினை வழங்கியது.*

**ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரித்து தீர்ப்பு!**

*5 நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பை வழங்கினர். அதில் டெல்லி அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற முந்தைய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.*

*டெல்லி மற்ற யூனியன் பிரதேசங்களிலிருந்து மாறுபட்டது என தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், அதிகாரிகள் அமைச்சர்களின் உத்தரவை செயல்படுத்துவதை தடுத்தால் கூட்டுப் பொறுப்பு பாதிக்கப்படும் என கருத்து தெரிவித்துள்ளது.*

*டெல்லி சட்டமன்ற அதிகாரத்துக்கு வெளியே உள்ள சில அம்சங்களில் மட்டுமே ஆளுநர் தலையிட முடியும் என்றும் சட்டமன்ற அதிகாரத்தில் துணைநிலை ஆளுநர் தலையிட முடியாது என தெரிவித்துள்ளது.*

*டெல்லியில் துணைநிலை ஆளுநரை விட முதலமைச்சருக்கே அதிகாரம் என தெரிவித்துள்ள அரசியல் சாசன அமர்வு, ஜனநாயகப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே நிர்வாக அதிகாரம் உண்டு என தெரிவித்து, ஆளுநருக்கே அதிகாரம் என்ற ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.*